

திருவள்ளூர் மாவட்ட ஆவடி மாநகராட்சி தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் மாற்றுத்திறனாளி ஜெயந்தி என்பவர் ஆவடி மாநகராட்சி நியமன மன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் ஆவடி மேயர் உதயகுமார், ஜி.ராஜேந்திரன், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், சன்பிராகஷ், பேபிசேகர், பொன்.விஜயன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 30 குழந்தைகளுக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான தா.மோ. அன்பரசன் தங்க மோதிரம் அணிவித்து பழங்கள் மற்றும் குழந்தைகள் உபகரண பொருட்களை வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன், ஒன்றிய – நகரச் செயலாளர்கள் எல்.இதயவர்மன், எஸ்.நரேந்திரன், மு.தேவராஜ், நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்து!

## எர்ணாவூர் நாராயணன் அறிக்கை!



சென்னை, நவ. 29- சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலாளராகவும், திருவல்லிக்கேணி சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சமத்துவ மக்கள் கழகத்தின் சார்பாக பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தி.மு.க. இளைஞரணி ஏறத்தாழ 40 ஆண்டுகள் வளர்த்தெடுத்து வலுப்படுத்தி கட்டி காத்த தமிழக முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் பொறுப்பினை இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல் என்ற வள்ளுவர் சொல்லுக்கு ஏற்ப துணை முதல்வர் அப்பொறுப்பினை வழங்கி இன்று தமிழக முழுவதும் சிறப்பாக பணியாற்றி வருகிறார் .திராவிட முன்னேற்றக் கழகத்தின் திறன் மிகுந்த இளைஞர்களை ஒருங்கிணைந்து திறம்பட கடந்த நாடாளு மன்ற , சட்டமன்ற தேர்தல்களில் சிறப்பாக பணியாற்றி திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் வெற்றி பெற பெரிதும் உறுதுணையாக இருந்தவர். விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் விளையாட்டு துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி வருகிறார். சமீபத்தில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தி இந்தியாவில் விளையாட்டுப் போட்டியில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ காரணமாக விளங்கி வருகிறார். குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக போராட்டம், நீட் தேர்வை ஒழிக்க கையெழுத்து இயக்கம், ஹிந்தி திணிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம் என தேய்வின்றி தனது பணியை செய்து வருபவர். துணை முதல்வர் அவர்கள் இன்னும் பல பதவிகள் பெற்று பல்லாண்டு பல நூறாண்டு வாழ சமத்துவ மக்கள் கழகம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



அம்பத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., பி.கே.மூர்த்தி, தெற்கு பகுதி கழகச் செயலாளர் டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி., முன்னிலையில், எம்.இ.சேகர் எம்.சி. தலைமையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு "நேத்ரோதயா பார்வையற்றோர் காப்பகத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் DR M.E.S. சந்தீப், பாலச்சந்தர், திலகம், ராஜேஷ், மணியரசன், மாறன், பிரவீன், நவீன், விஜயகுமார், டி.விஜயகுமார், எஸ்.அமுதா, சரிதா மற்றும் 89வது வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து

# அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுவிப்பு!

## சிவகங்கை மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு!



சிவகங்கை, நவ. 29 - சொத்துக் குவிப்பு வழக்கில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மற்றும் குடும்பத்தினரை விடுதலை செய்து சிவகங்கை நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழக அமைச்சரவையில் கடந்த 2006 முதல் 2011 வரை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக கே.ஆர்.பெரியகருப்பன் இருந்தார். இவர் அமைச்சராக பணியாற்றிய காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக ரூ.1.20 கோடி சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார், கடந்த 2012ம் ஆண்டு கே.ஆர்.பெரியகருப்பன், அவரது மனைவி பிரேமா, தாய் கருப்பாயி அம்மாள், மகன் கோகுலகிருஷ்ணன், மைத்துனர் செந்தில்வேல் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கு சிவகங்கை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கு விசாரணையின் போது அமைச்சரின் தாய் கருப்பாயி அம்மாள் இறந்துவிட்டார். இந்த வழக்கில் விசாரணை முடிந்த நிலையில் நேற்று முன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது.

இதையொட்டி அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜராகினர். வழக்கை விசாரித்த நீதிபதி அறிவொளி, வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த குற்ற ச்சாட்டு நிரூபிக்கப்படாததால் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் உள்ளிட்ட நான்கு பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனைப்படி, தயாநிதி மாறன் எம்.பி, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ, ச.பரமசிவம், கார்த்திக் மோகன் ஆகியோர் வழிகாட்டுதல்படி, வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமையில் மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி, 101 (அ) வது வட்டச் செயலாளர் சி.பி.திருமலை ஆகியோர் முன்னிலையில் கழகக் கொடி ஏற்றி, பொதுமக்களுக்கு காலை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. உடன் மாவட்ட தொழிலாளர் அணி துணைத் தலைவர் டி.தயாளரங்கன், வர்த்தக அணி மாவட்ட துணை அமைப்பாளர் டி.சமந்தா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி எம்.எஸ். மணி

**நவம்பர் 29 (1980)**



திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின்பால் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர்.

திருச்சி மாவட்டத்தில் தி.மு.கழகம் தழைத்தோங்க தொடக்க காலந்தொட்டுப் பெரும் பணியாற்றியவர்.

திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர் இவர். தொழிற்சங்க இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசாக் கைதியாக சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தி.மு.க. மகளிர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு மகளிர் அணியின் ஈரோடு வடக்கு மாவட்டம் மற்றும் கும்பகோணம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - கே.ஜி.சரஸ்வதி, 10, பழனியப்பா வீதி, புதுவள்ளியம்பாளையம், கோபி.

துணைத் தலைவர் - சி.கிருஷ்ணவேணி, 4/117, மெயின் ரோடு, அளுக்குளி, கோபி.

அமைப்பாளர் - எம்.பாண்டியம்மாள், 19, இந்திரா வீதி குறுக்கு-1, தவுட்டுபாளையம், அந்தியூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே.ரேணுகாதேவி, 135/1, கஸ்பா வீதி, பொலவக்காளிபாளையம், கோபி. 2) எஸ். மகேஸ்வரி, 21/1, திருவள்ளுவர் வீதி, அரியப்பம்பாளையம், சத்தி. 3) பி.பாக்கியலக்ஷ்மி, 217, கவின் கார்டன், சின்னமொடச்சூர், கோபி. 4) எம்.ஜெயலட்சுமி, சுமைதாங்கி அருகில், தாழைக்கோம்புபுதூர், கூகலூர், கோபி. 5) எம். பர்வீன்பேகம், 23ஏ, சிலேட்டர் ஹவுஸ் வீதி, கோபி. வலைத்தள பொறுப்பாளர் ஏ.ஹாத்துண்ஜன்னா, 132/3, மேற்கு வீதி, நேருநகர், அரியப்பம்பாளையம், சத்தி.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

#### கும்பகோணம் மாநகரம்

தலைவர் - ஜி. தீபா, 72/43, சிங்காரம் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - பா. விஜயா, 77/36, சாரங்கபாணி தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் - ச. தமிழ்செல்வி மோகன், 25/34, பாணாதுறை மேல வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) த. பானுமதி 18/127, கும்பேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 2) பி. பிளாரன்ஸ்மேரி 7சி, பாணாதுறை மெயின் ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 3) அ. ஜெயலட்சுமி பாணாதுறை 14வது தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 4) பா. மங்கையர்கரசி 74, சாரங்கபாணி தெற்கு வீதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 5) வே. மகாலட்சுமி 86, காசிராமன் தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 6) அ. வர்ஷா 2ஏ, கோதண்டபாணி தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். 7) ப. பானுமதி 30, சித்தா தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-11-2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச. அன்பழகன்

**நவம்பர் 29 (2022)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

பேரூர் வார்டு செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

மேச்சேரி கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவராகவும், மேச்சேரி கூட்டுறவு பட்டு கூட்டுறவுச் சங்க துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**